UNIT EXAM NO :- 02/A/L/2020

அலகுப்பரீட்சை – இரட்டைப்பதிவு விதி

| 33 | T | I,II |
|---|---|---|

BY :- Mr V.S.ThiruKumaran B.Com (Acc) Spl 0776158050 முதற்பதிவேடுகள்

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) ப் பரீட்சை, 2020 ஆகஸ்ட்

General Certificate of Education (Adv.Level) Examination, August 2020

# Accounting I II

# கணக்கீடு I II

A/L 2020

அலகு மாதிரிப் பரீட்சை

தேர்ச்சி 03, 04,

இல 02

11.05.2020

2.00 மணி

பகுதி I

**Q1)** பின்வரும் கூற்றுக்களில் சரியானகூற்றை நீர் ஓர் கணக்கீட்டு மாணவர் என்ற அடிப்படையில் தெரிவு செய்க.

A – ஆதனம்பொறி கடன் கொள்வனவு சார்பான கடன்கொடுநர் கணக்கு பொதுப்பேரேட்டில் காணப்படும்.

B- வைப்புச் செய்யப்பட்டு மறுக்கப்பட்ட காசோலைக்குரிய முதற்பதிவு பொது நாட்குறிப்பேட்டில் இடம்பெறும்

C- முற்பன கட்டுநிதித் தொகை என்பது சில்லறைக்காசாளனால் செலவிட்ட தொகையை பிரதம காசாளன் மீளளிக்கும் தொகையாகும்.

D – விற்பனைத்திரும்பல் ரூ 5000 விற்பனை நாளேட்டில் ரூ 50000 என பதியப்பட்டது இவ்வழு கடன்பட்டோர் பேரேட்டு பட்டியலின் கூட்டுதொகையில் மாற்றத்தை ஏற்படுத்தும்

1.BC 2. AB 3. ABD 4. BCD 5. AD

Q2 நிரல் A மூல ஆவணத்தையும் நிரல் B முதற் பதிவேட்டையும் கொண்டுள்ளது நிரல் A இற்கு அமைய நிரல் B ஒழுங்குபடுத்தும் சரியான தொடர் எது? (………..)

| நிரல் A | நிரல் B |
|---|---|
| 1) வரவுத்தாள் | A காசுக்கொடுப்பனவு நாட்குறிப்பேடு |
| 2) நாட்குறிப்பு கச்சாத்து | B உட்திரும்பல் நாளேடு |
| 3) கைச்சாத்து | C கொள்வனவு நாளேடு |
| 4) செலவுத்தாள் | D பொது நாட்குறிப்பேடு |
| 5) பட்டியல் | E வெளித் திரும்பல் நாளேடு |

1) ACDEB 2) BCDEA 3) EDCBA 4) EDABC 5) EDBCA

Q3) கணக்காண்டு முடிவில் கீழேதரப்பட்டுள்ள கணக்கீட்டுச் சோடிகளில் எது மூடியவையாகவும், மீதிமுன்கொண்டு செல்பவையாகவும் காணப்படுகின்றது.

| | **மூடியவை** | **மீதி முன்கொண்டு செல்பவை** |
|---|---|---|
| 1) | சொத்து | செலவு |
| 2) | செலவு | சொத்து |
| 3) | பொறுப்பு | வருமானம் |
| 4) | வருமானம் | செலவு |
| 5) | உரிமை | செலவு |

- குகன் நிறுவனத்தின் 2019 மே மாத விற்பனை விபரம் வருமாறு

| விற்பனை | விற்பனை | காசுக் கழிவு | வியாபாக் கழிவு | விற்பனை திகதி | பணம்செலுத்திய திகதி |
|---|---|---|---|---|---|
| காசு | 5000 | | 20% | 5.5 | 5.5 |
| ராஜன் | 10000 | 10% | 20% | 10.5 | 18.5 |
| ரமணி | 8000 | 10% | 20% | 15.5 | 27.5 |

பத்து நாட்களுள் பணம் செலுத்தும் வாடிக்கையாளருக்கே காசுக் கழிவு அனுமதிக்கப்படும் மேலேயுள்ள தரவுகளை அடிப்படையாககொண்டு 4ம் 5ம் வினாக்களுக்கு விடை தருக.

Q4) மே மாதத்திற்கான கொடுத்த கழிவும் பெற்றகாசுத் தொகையும் முறையே யாது?

1) ரூ 800, ரூ 17600 2) ரூ 1440 , ரூ 16960 3) ரூ 1440 ரூ 23000
4) ரூ 1800 ரூ 16960 5) ரூ 1800 ரூ 17600

Q5) மே மாதத்திற்கான விற்பனை வருமானமும் 25.5 இல் கடன்பட்டோர் மீதியும முறையே யாது?

1) ரூ 23000, ரூ 18000 2) ரூ 18400 , ரூ 6400 3) ரூ 18400 ரூ 14400
4) ரூ 18000 ரூ 18000 5) ரூ 18000 ரூ 6400

Q6) வரையறுத்த திலக் கம்பனியின் கடன்கொடுநர் பட்டியல் ரூ 48000 கட்டுப்பாட்டு கணக்கு உடன்படவில்லை காரணங்கள் வருமாறு. (………..)

- கட்டுப்பாட்டுக் கணக்கின் வரவுப் பக்கம் ரூ 2000 மிகையாக கூட்டப்பட்டது.
- எதிர்மாற்றல் ரூ 4000 கடன்கொடுநர் பேரேட்டில் ரூ 400 என பதியப்பட்டது.
- விதித்தவட்டி ரூ 4200 பொதுப்பேரேட்டில் உள்ள கணக்குகளில் ரூ 2400 என பதியப்பட்டது.

கடன்கொடுநர் கட்டுப்பாட்டுக்கணக்கு மீதி யாது?

1) ரூ 41200 2) ரூ 44200 3) ரூ 40800 4) ரூ 40600 5) 44600

Q7) பின்வரும் கூற்றுக்களில் சரியான கூற்றை தெரிவு செய்க.

A நிலையானவைப்பு வட்டி வங்கிக்கூற்றிற்கு வரவிடப்படும்

B மற்றவைகள் மாறாத நிலையில் மாற்றப்படாத காசோலை காணப்படின் வங்கிக் கணக்கு மீதியை விட வங்கிக்கூற்றுமீதி உயர்வாக காணப்படும்

C காசுக்கட்டுப்பாட்டு கணக்குமீதியும் வங்கிக்கூற்று மீதியும் மாத இறுதியில் சமப்படின் வங்கிக்கணக்கிணங்ககூற்று தயாரிக்கபடமாட்டாது.

D விற்பனைத் திரும்பல் ரூ 5500 விற்பனைத்திரும்பல் நாளேட்டில் ரூ500 எனபதிவிடப்படின் கட்டுப்பாட்டுகணக்கு மீதியைவிட பட்டியல் மீதி அதிகமாக காணப்படும்.

1) ABD 2) ACD 3) AD 4) B மட்டும் 5) BC

**Q8)** வரையறுத்த அகில் கம்பனியின் 31.3.2019 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான கடன்படுநர் பட்டியல் ரூ 36000 கட்டுப்பாட்டுக் கணக்கு உடன்படவில்லை காரணங்கள் வருமாறு. (………..)

- கொடுத்த கழிவு ரூ 2100 காசுக்பெறுவனவு நாட்குறிப்பேட்டில் ரூ 1200 எனபதியப்பட்டது.
- எதிர்மாற்றல் ரூ 3000 கடன்படுநர் பேரேட்டில் ரூ 300 என பதியப்பட்டது.
- விதித்த வட்டி 2000 துனைப்பேரேட்டில் உள்ள கணக்குகளில் பிழையான பக்கங்களில் பதியப்பட்டது.
- மறுக்கப்பட்ட காசோலை ரூ 4000 பொதுப்பேரேட்டில் உள்ள கணக்குகளில் பதியப்படவில்லை.

திருத்தப்பட்ட கடன்படுநர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியும் திருத்த முன்கடன்பட்டோன்கட்டுப்பாட்டு கணக்கு மீதியும் யாது?

1) ரூ 37300, ரூ 32400 2) ரூ 35600, ரூ 33300 3) ரூ 37300, ரூ33400
4) ரூ 34400, ரூ 33400 5) ரூ 36400, ரூ 33300

♣ சுயந்தன் நிறுவனத்தின் 2019 மார்ச் எப்பிரல் மாதங்களுக்கான தகவல்கள் வருமாறு

| | மே | எப்பிரல் |
|---|---|---|
| எழுதிக்கொடுக்கப்பட்ட காசோலை | 154000 | 210000 |
| வைப்பச் செய்யப்பட்டகாசோலை | 205000 | 232000 |

இக்காலப்பகுதிகளுக்கான வங்கிக்கூற்றில் காணப்படும் தகவல்கள் வருமாறு

| | மே | ஏப்பிரல் |
|---|---|---|
| மாற்றப்பட்ட காசோலை | 138000 | 202000 |
| வசூழிக்கப்பட்ட காசோலை | 170000 | 227000 |
| நேரடிவைப்பு | 3000 | 6000 |
| வங்கிக்கட்டனம் | 4000 | 3000 |

2019 ஏப்பிரல் மாத காசுக்கட்டுப்பாடு மீதி ரூ 72000 சென்ற மாத மாற்றப்படாத வசூழிக்கப்படாத காசோலை நடப்பு மாதத்தில் மாற்றப்பட்டு வசூக்கப்பட்டது.

9,10 ஆம் வினாக்களுக்கு விடை தருக

Q9) மே மாதத்தில் மாற்றப்படாத வசூழிக்கப்படாத காசோலைகள் யாது? (……)

| | மாற்றப்படாத காசோலை | வசூழிக்கப்படாத காசோலை |
|---|---|---|
| 1) | ரூ 24000 | ரூ 10000 |
| 2) | ரூ 16000 | ரூ 35000 |
| 3) | ரூ 18000 | ரூ 15000 |
| 4) | ரூ 24000 | ரூ 40000 |
| 5) | ரூ 18000 | ரூ 40000 |

Q10) மே திருத்திய காசுக்கட்டுப்பாட்டு கணக்கு மீதியும் மே மாத வங்கிக்கூற்று மீதியும் யாது?

1) ரூ 135000, 109000 2) ரூ 145000, 108000 3) 138000, 105000
4) ரூ 125000 ரூ100000 5) ரூ 125000 109000

**11 தொடக்கம் 15 வினாக்களுக்கு விடை தருக**

♣ வரையறுத்த சோகிரடிட் கம்பனியில் 2019 மாச் மாதத்தில் இடம்பெற்ற பிழைகள் வருமாறு

A – விற்பனைத்திரும்பல் ரூ 200 விற்பனை நாளேடுட்டில் ரூ 2000 என பதியப்பட்டது
B – பெற்றவாடகை ரூ 4000 கொடுத்தவாடகை கணக்கில் 400 எனவரவிடப்பட்டது
C – 2019 மார்ச் 1 இல் பொறிக் கொள்வனவு ரூ 100000 கொள்வனவு கணக்கில் ரூ 10000 என பதியப்பட்டது. பொறிக்கு 12 % தேய்விடப்படுகின்றது
D- ஆரம்ப இருப்பு ரூ 2000 கூட்டி மதிப்பிடப்பட்டது.

**11ம் 12ம் ம் வினாக்களுக்கு விடை தருக**

Q11) அ) மேற்படி பிழைதவறுகளால் தொங்கல் கணக்கு மீதி யாது?

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

ஆ) மேற்படி பிழைதவறுகளால் இலாபத்தில் ஏற்பட்ட தாக்கம் யாது?

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………..

Q12) அ) மேற்படி பிழை தவறுகளை திருத்துவதால் தேறிய சொத்தில் ஏற்பட்ட தாக்கம் யாது?

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………..

ஆ) A, D யை திருத்துவதற்கான நாட்குறிப்பு பதிவை தருக.

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………..

……………………………………………………………………………………………..

……………………………………………………………………………………………..

……………………………………………………………………………………………

Q13) ரூ 200000 பட்டியல் விலையில் கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்ட பண்டங்களக்கு 20% வியாபாரக்கழிவு அனுமதிக்கப்பட்டதுடன் இக்கடனில் ¼ பகுதி 15% கழிவுடன் செலுத்தப்பட்டது. இது தொடர்பில் தோன்றக்கூடிய கணக்கு மீதிகள் என்ன?

அ) கொள்வனவு கணக்கு …………………

ஆ) பெற்றகழிவு ……………………..

இ) கடன்கொடுநர் கணக்கின் இறுதிமீதி ……………………..

ஈ) காசுக்கொடுப்பனவை பதிவதற்கான இரட்டைப்பதிவு …………………………………

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

Q14) 2019 மார்ச் மாத வங்கிக்கூற்றுவங்கி மீதி ரூ 37000 செலவு மீதியை காட்டியதுன், காசுக்கட்டுப்பாட்டு கணக்கு மீதி ரூ 42000 வேறுபட்டது காரணங்கள்

கைத்தேறாத வைப்புக்கள் ரூ 8000, நேரடிவைப்பு ரூ 4000,
நிலையியற்கட்டளை காப்புறுதி ரூ 3000 காசோலைப்புத்தக கட்டனம் ரூ 1000
வைப்புச் செய்யப்பட்டு மறுக்கப்பட்ட காசோலை ரூ 2000
வினாக்களுக்கு விடை தருக

அ) மார்ச் மாத மாற்றப்படாத காசோலை யாது?

……………………………………………………………………………………

ஆ) திருத்திய காசுக்கட்டுப்பாட்டு கணக்கு மீதி யாது?

…………………………………………………………………………………..

Q15) வரையறுத்த மாலதி கம்பனியின் 31.3.2019 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான கடன்கொடுநர் கட்டுப்பாட்டுகணக்கு மீதி ரூ 58000

A – கொள்வனவு நாளேடு ரூ 2000 ஆல் கூட்டின் கூட்டப்பட்டது.

B – விதித்த வட்டி ரூ 2000 கடன்கொடுநர் பேரேட்டில் ரூ 200 என பதியப்பட்டது.

C – கொள்வனவுத் திரும்பல் ரூ 10000 கொள்வனவுத்திரும்பல் நாளேட்டில் ரூ 1000 என பதியப்பட்டது

D – மறுக்கப்பட்ட காசோலைரூ 4000 கடன்கொநர் பேரேட்டில் பிழையான பக்கத்தில் பதிவிடப்பட்டது

**அ**) திருத்தப்பட்ட கடன்கொடுநர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி

……………………………………………………………………………………

**ஆ**) திருத்தமுன் கடன்கொடுநர் பேரேட்டுப்பட்டியல் மீதி

………………………………………………………………………………

**(15 X 3 ) 45 புள்ளிகள்**

## பகுதி I

**வினா இல01**

2019 மே மாதத்துடன் தொடர்புடைய சைன் கம்பனியுடன்தொடபர்புடைய தகவல்கள் வருமாறு.

1.5 இல் மீதிகள் கடன்பட்டோர்

| | |
|---|---|
| சண் | 18000 |
| மூண் | 10000 |
| ஸ்ரார் | (4000) |

1.5 இல் மீதிகள் கடன்கொடுநர்

| | |
|---|---|
| ஆதி | 8000 |
| சிவன் | 6000 |
| பரமன் | (2000) |

1.5 இல் ஐயக்கடன் ஏற்பாடு 2000

| கடன்பட்டோர் | விற்பனை | கழிவு | பெற்றறகாசு | 31.5.2019 மீதி |
|---|---|---|---|---|
| சண் | 32000 | 4000 | 16000 | 30000 |
| மூண் | 16000 | 1000 | 12000 | 13000 |
| ஸ்ரார் | 14000 | 3000 | 2000 | 5000 |
| மொத்தம் | 62000 | **8000** | **30000** | **48000** |

| கடன்கொடுநர் | கொள்வனவு | கழிவு | செலுத்திய காசு | 31.5.2019 மீதி |
|---|---|---|---|---|
| ஆதி | 22000 | 1500 | 15500 | 13000 |
| ரமனி | 18000 | 800 | 13200 | 10000 |
| கஜனி | 24000 | 1000 | 18000 | 3000 |
| மொத்தம் | **64000** | **3300** | **46700** | **26000** |

1.5 இல் கட்டுப்பாட்டு கணக்கு மீதியம் பட்டியல் மீதியும் சமனாக காணப்பட்ட போதும் 31.5.2019 இல் பேரேட்டு மீதிகள் கட்டுப்பாட்டுக்கணக்கு மீதிகளுடன் இணங்கவில்லை காரணங்கள் வருமாறு.

1) விற்பனைநாளேட்டின் மொத்தம் கடனபட்டோன் கட்டுப்பாட்டுக்கணக்கிலும் விற்பனைக்கணக்கிலும் ரூ 26000 என பதியப்பட்டது.
2) கொடுத்தகழிவு கடன்பட்டோன் கட்டுப்பாட்டுக்கணக்கில் வரவிடப்பட்டுள்ளது. எனினும் கொடுத்த கழிவுக்கணக்கில் சரியாக பதியப்பட்டுள்ளது.
3) கொள்வனவுநாளேட்டின் மொத்தம் கடன்கொடுத்தோன் கட்டுப்பாட்டுக்கணக்கிலும் கொள்வனவுக்கணக்கிலும் ரூ 45000 என பதியப்பட்டது.
4) ரமணி திருப்பிய ரூ 2000 பொருட்கள் கடன்கொடுத்தோன் பேரேட்டிலுள்ள இவரின்கணக்கில் பதியப்படவில்லை. இது பொதுப்பேரேட்டிலுள்ள கடன்கொடுத்தோன்கட்டுப்பாட்டுக்கணக்கில் வரவில் பதியப்பட்டுள்ளது.
5) சண்னிடம்பதிவளித்த ரூ2000 அறவிடமுயாக்கடன் கடன்பட்டோன் பேரேட்டிலும் கட்டுப்பாட்டுகணக்கிலும் பதியப்படவில்லை எனினும் அறவிடமுடியாக்கடன் கணக்கில் சரியாக பதியப்பட்டது.
6) 31.5.2019 கடன்பட்டோன் மீதியில் 10% ஐயக்கடன் ஏற்பாடு மேற்கொள்ள வேண்டும்.
7) 31.3.2019 இல் முடிவடைந்த மேற்படிதவறுகள் சிராக்கமுன் ஆண்டுக்கான இலாபம் ரூ 112000

**வேண்டப்படுவது**

**1)1-6 வரையாபன பிழையை திருத்துவதற்கான நாட்குறிப்பு பதிவு**
**2) திருத்திய லாபம்**
**3)திருத்தமுன், திருத்திய கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக்கணக்கு**
**4) திருத்தமுன் , கடன்கொடுநர் கட்டுப்பாட்டுக் கணக்கு**
**5) திருத்திய கடன்கொடுநர் பேரேட்டுப்பட்டியல்**
**6) அறவிடமுடியா ஐயக்கடன் ஏற்பாட்டுக் கணக்கு**

(20 புள்ளிகள்)

**வினா இல 02**

குருபரன் நிறுவனத்தின் 2019 மேமாதத்திற்கான காசுக்கட்டுப்பாட்டு கணக்கு தகவல்கள் வருமாறு
1.5 காசுக்கட்டுப்பாட்டு கணக்கு மீதி 52000
காசுவிற்பனை 124000
பெற்ற வாடகை 12000
கடன்பட்டோரிடம் 10% கழிவு தள்ளி சேகரிப்பு 45000
மூலதனமிட்டது 20000
காசோலைக்கொள்வனவு 112000
கடன்கொடுநருக்கு 5% கழிவு தள்ளி செலுத்தியது 28500
மின்சாரம் 8000
பற்று 2000

**மே மாதத்திற்கான வங்கிக்கூற்றில் உள்ள தகவல்கள் வருமாறு**

மே மாதத்தில் வசூழிக்கப்பட்ட காசோலைகள் 189000
மே மாததத்தில் பணமாக்கப்பட்டவை 141000
நேரடியாக வசூழித்த பங்குலாபம் 8000
நிலையியற்கட்டளை காப்புறுதி 4000
காசோலைப் புத்தகக்கட்டனம் 2000

**மேலதிக தகவல்**

1. வங்கிக்கூற்றின் வரவு நிரல் ரூ 2000 மிகையாககூட்டப்பட்டது.
2. மே மாதம் வசூழிக்கப்பட்ட காசோலைகளில் ஏப்பிரல் மாத வசூழிக்கப்படாத காசோலை ரூ 4000 உள்ளடங்கியுள்ளது.
3. மே மாதம் மாற்றப்பட்ட காசோலைகளில் ஏப்பிரல் மாத மாற்றப்படாத காசோலை ரூ 5000 முழுவதும் உள்ளடங்கியுள்ளது.

வேண்டப்படுவது

1. காசுப்பெறுவனவு நாளேடு, காசுக்கொடுப்பனவு நாளேடு, மே மாத காசுக்கட்டுபாட்டு கணக்கு
2. மே மாத திருத்திய காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு
3. மே மாத வங்கிக் கணக்கிணங்ககூற்று

(20 புள்ளிகள்)

**வினா இல 03**

வரையறுத்த தீபன் கம்பனியின் பரீட்சை மிதி *31/3/2019* இல் சமப்படவில்லை வித்தியாசம் தொங்கல் கணக்கிற்கு மாற்றப்பட்டு பின்னர் பின்வரும் பிழைதவறுகள் கண்டுபிடிக்கப்பட்டன. மேற்படி நிறுவனத்தின் *31/3/2019* இல் முடிவுற்ற ஆண்டுக்கான தேறியலாபம் 46000 ஆகும்.

அ) ஆரம்பஇருப்பு ரூ 2000 ஆல் கூட்டிமதிப்பிடப்பட்டது.
ஆ) பேரேட்டில் காணப்பட்ட விளம்பரக் கணக்கு மீதி ரூ 2000 பரீட்சைமீதிக்கு எடுத்துவரவில்லை.
இ) 1.10.2018 இல் இடம்பெற்ற பொறிக்கொள்வனவு ரூ 40000 பொறிபழுதுபார்த்தல்கணக்கிற்கு வரவிடப்பட்டது. பொறிக்கு 20% தேய்விடப்படுகின்றது.
ஈ) உரிமையாளரின் சொந்த ஆயுட்காப்புறுதிக்கு செலுத்திய ரூ 3000 நிறுவன காப்புறுதிக் கணக்கிற்கு வரவிடப்பட்டது.
உ) வங்கிக்கடனுக்கு செலுத்திய ரூ 12000 தவனைக்கட்டனம் முழுவதும் வங்கிக் கடன் கணக்கிற்கு வரவிடப்பட்டது எனினும் இதில் ரூ 2000 வட்டி உள்ளடங்கியுள்ளது.
ஊ) அறவிடமுடியாக்கடன் ரூ 4000 அறவிடமுடியாக் கடன் கணக்கிலும் கடன்பட்டோன் கணக்கிற்கும் வரவிடப்பட்டது.
எ) எதிர்மாற்றல் ரூ 5000 ஏடுகளில் எப்பதிவுக்கும் உட்படுத்தப்படவில்லை.
ஏ) கடன்பட்டோர் மீதியில் 10% ஐயக்கடன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**வேண்டப்படுவது 1) பிழை தவறுகளை திருத்துவதற்கான குறிப்பேட்டுப் பதிவுகள்.**
**2) தொங்கல் கணக்கு**
**3) தேறியலாபச்சிராக்க கூற்று**

**(15 புள்ளிகள்)**